## பாதுகாப்புக் குறித்து விழிப்புடன் இருங்கள்

லித்தியம்-அயன் பற்றரிகளால் (batteries) இயக்கப்படும் ஏதாவது சாதனங்களைப் பயன்படுத்துவதானால்:

- UL / ULC போன்ற தகுதிவாய்ந்த சோதனை ஆய்வகத்தால் பட்டியலிடப்பட்ட சாதனங்களை வாங்கிப் பயன்படுத்துங்கள்.
- சாதனங்களைச் சார்ஜ் செய்வதற்கும் சேமிப்பதற்கும் உற்பத்தியாளரின் வழிமுறைகளைப் பின்பற்றவும்.
- அந்தச் சாதனத்திற்காக, உற்பத்தியாளரால் வடிவமைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பற்றரிகள் மற்றும் சார்ஜிங் கம்பிகளை மட்டுமே பயன்படுத்தவும்.
- உங்கள் தலையணைக்கு அடியிலோ அல்லது உங்கள் படுக்கையிலோ அல்லது சோபாவிலோ வைத்து எந்த சாதனத்தையும் சார்ஜ் செய்ய வேண்டாம்.
- சாதனங்களை மேலதிகமாகச் சார்ஜ் செய்வதைத் தவிர்க்கவும்; சாதனம் முழுமையாகச் சார்ஜ் ஆனவுடன் இணைப்பைத் துண்டிக்கவும்.
- சூரிய ஒளி நேரடியாகப் படும் இடங்களில் அல்லது சூடான வாகனங்களில் பற்றரிகளை வைக்க வேண்டாம்.
- லித்தியம்-அயன் பற்றரிகளைத் தீப்பிடிக்கக்கூடிய எதிலிருந்தும் விலக்கி வைக்கவும்.
- ஒரு சாதனம் அல்லது சார்ஜரை நெரித்தல், வளைத்தல் அல்லது கீழே போடுவதைத் தவிர்க்கவும்.

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றை நீங்கள் கவனித்தால் பற்றரியைப் பயன்படுத்துவதை நிறுத்துங்கள்: துர்நாற்றம், நிறத்தில் மாற்றம், வடிவத்தில் மாற்றம், அதிக வெப்பம், கசிவு அல்லது பற்றரியிலிருந்து வரும் சத்தம்.

உங்கள் வீட்டிலிருந்து தப்பிக்கும் திட்டத்தைப் பின்பற்றுங்கள் பாதுகாப்பாக வெளியே வந்தவுடன் 9-1-1 ஐ அழைக்கவும்.

## லித்தியம்-அயன் பற்றரிகள்

திறன்பேசிகள், மடிகணினிகள், மின்-ஸ்கூட்டர்கள், மின்-பைக்குகள் மற்றும் பொம்மைகள் உள்ளிட்ட பல வகையான சாதனங்களுக்குச் சக்தி அளிக்க லித்தியம்-அயன் பற்றரிகள் பயன்படுத்தப்படுகின்றன.

லித்தியம்-அயன் பற்றரிகள் குறைந்த அளவிலான இடத்தில் அதிகளவு ஆற்றலைச் சேமித்து வைக்கின்றன, மேலும் அவை முறையாகப் பயன்படுத்தப்படாவிட்டால் தீப் பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத்தக்கூடும்.

முறையற்ற சார்ஜிங் மற்றும் துர்ப்பாவனை ஆகியவை இந்த பற்றரிகள் வெடித்து விரைவாகத் தீப்பிடிக்கக் காரணமான சில முதன்மையான காரணிகளாகும்.

மேலும் அறிவதற்கு: **toronto.ca/lithiumbattery**



**லித்தியம்-அயன் பற்றரியை முறையற்ற விதத்தில் அகற்றுவது கழிவுச் சேகரிப்பாளருக்குத் தீங்கு விளைவிக்கும்.** உங்கள் மின்-பைக் பற்றரிகளை நகரத்தில் அவை போடப்படுவதற்காக உள்ள ஒரு இடத்தில் போட்டு அப்புறப்படுத்தவும்.



**மாற்றியமைக்கப்படும் லித்தியம்-அயன் பற்றரி உங்கள் ஆயுளை முடிவுக்குக் கொண்டுவரக்கூடும்.** உங்கள் மின்-பைக் பற்றரியை ஒருபோதும் சேதப்படுத்தாதீர்கள்.



**லித்தியம்-அயன் பற்றரியை அதிகமாகச் சார்ஜ் செய்வது உங்கள் குடும்பத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடும்.** சார்ஜ் செய்யும்போது உங்கள் e-bike பற்றரியை எப்போதும் பார்வையில் படுமாறு வைத்திருங்கள்.



**சான்றளிக்கப்படாத லித்தியம்-அயன் பற்றரி உங்கள் அயலவருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடும்.** உங்கள் மின்-பைக்கில் உற்பத்தியாளர் பரிந்துரைக்கும் பற்றரிகளை மட்டுமே பயன்படுத்தவும்.



# உங்களுக்கான எச்சரிக்கை

## லித்தியம்-அயன் பற்றரிகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல்

FIRE SERVICES TORONTO

**toronto.ca/firesafety**

TORONTO

# தீப் பாதுகாப்பு உங்களிலிருந்து தொடங்குகிறது

### தவிர்க்கவும்

லித்தியம்-அயன் பற்றரிகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் உங்கள் வீட்டில் தீ விபத்து ஏற்படுவதைத் தவிர்க்கவும்.

### கண்டறியவும்


அனைத்துத் தளநிலைகளிலும், தூங்கும் பகுதிகள் அனைத்துக்கு வெளியேயும் புகை எச்சரிக்கை (smoke alarm) வேலை செய்வதை உறுதிசெய்து கொள்ளுங்கள். தேவைப்படும் இடங்களில், தூங்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் வெளியே வேலை செய்யும் கார்பன் மொனொக்சைட் எச்சரிக்கை அலாரத்தை வைத்திருங்கள். உங்கள் அலாரங்களைத் தவறாமல் சோதிக்கவும்.

### தப்பிக்கவும்

உங்கள் வீட்டில் தீயிலிருந்து தப்பிக்கும் திட்டத்தைத் தயாரித்துப் பயிற்சி செய்யுங்கள். வெளியேற்றம் தேவைப்பட்டால் என்ன செய்ய வேண்டும், எங்கு செல்ல வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மேலும் அறிவதற்கு **toronto.ca/hhw**

LEARN THE RULES FOR ALL
**RIDEABLES**



**toronto.ca/Rideables**

# லித்தியம்-அயன் பற்றரிகள் உயரமான கட்டிடங்களில்

## உங்கள் வீட்டைப் பாதுகாக்கவும். உங்கள் அயலவரைப் பாதுகாக்கவும்.

லித்தியம்-அயன் பற்றரிகள் எல்லா இடங்களிலும் உள்ளன - தொலைபேசிகள், மடிகணினிகள், மின்-பைக்குகள், ஸ்கூட்டர்கள் மற்றும் பலவற்றில். அவை பயனுள்ளவைதான், ஆனால் பாதுகாப்பாகப் பயன்படுத்தப்படாவிட்டால் தீப்பிடித்துவிடும்.

### சவாரி செய்கையில் பாதுகாப்பு:

- மண்டப நடை பாதைகள், படிக்கட்டுகள் அல்லது பகிரப்பட்ட பகுதிகளில் மின்-பைக்குகள் அல்லது பிற லித்தியம்-அயன் சாதனங்களை ஒருபோதும் சார்ஜ் செய்ய வேண்டாம்.
- ஒரு அலகின் நுழைவாயிலுக்கு அருகில் ஒருபோதும் பொருட்களைச் சார்ஜ் செய்யவோ அல்லது சேமிக்கவோ கூடாது.
- உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்படும் பற்றரிகளை மட்டுமே பயன்படுத்தவும்.
- மின்-பைக்குகள் போன்ற சவாரி செய்யக்கூடிய பொருட்களுக்கான சார்ஜிங் கொள்கைகள் குறித்துக் கட்டிட நிர்வாகத்திடம் தெரிந்து கொள்ளவும்.

### உங்கள் வீட்டு அலகில் பற்றரி ஒன்று தீப்பிடித்தால்:

1. உடனடியாக வெளியேறவும்.
2. பாதுகாப்பாக இருந்தால், தீயைக் கட்டுப்படுத்த உங்கள் பின்னால் உள்ள கதவுகளை மூடவும்.
3. உங்களது தளத்தின் படிக்கட்டிற்கு அருகிலுள்ள சிவப்புநிறத் தீ எச்சரிக்கை சாதனத்தை இழுத்து “fire!” எனக் கூச்சலிடவும்.
4. மிக அருகிலுள்ள படிக்கட்டு வெளியேற்ற வாயில் மூலமாகக் கட்டிடத்தை விட்டு வெளியேறவும். மின்தூக்கியைப் (elevator) பயன்படுத்த வேண்டாம்.

உயரமான கட்டிடத்தின் தீப் பாதுகாப்புப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு:

- உங்கள் கட்டிட நிர்வாகத்திடம் கேளுங்கள்.
- 311 என்ற எண்ணைத் தொடர்பு கொண்டு ரொறன்ரோத் தீயணைப்பு சேவைகளைத் தொடர்பு கொள்ளவும்.
- பார்வையிடவும் **toronto.ca/HighRiseFire**.

# பற்றரிகளைப் பாதுகாப்பாக அகற்றல்

லித்தியம்-அயன் பற்றரிகள் வீட்டின் அபாயகரமான கழிவுகள் மற்றும் அவற்றை **ஒருபோதும்** குப்பைத் தொட்டியில், நீல நிறத் தொட்டியில் (மறுசுழற்சி) அல்லது பச்சை நிறத் தொட்டியில் (கரிமப் பொருட்கள்) போடக்கூடாது. லித்தியம்-அயன் பற்றரிகளை நகரிலுள்ள அப்புறப்படுத்தும் இடங்கள் (Drop-Off Depots) ஒன்றில் அல்லது சமூகச் சுற்றுச்சூழல் தினத்தில் பாதுகாப்பாக அப்புறப்படுத்தக் கொண்டு வரவும்.

உங்களிடம் 10 முதல் 50 லீட்டர்/கிலோகிராம் அபாயகரமான வீட்டுக்கழிவுகள் இருந்தால், நகரத்தினால் வழங்கப்படும், இலவசமாக நச்சுப்பொருட்களை எடுத்துச்செல்லும் டாக்ஸி (Toxic Taxi) சேவையையும் ஏற்பாடு செய்யலாம்.

பற்றரிகளை முறையற்ற விதத்தில் சேமித்து அப்புறப்படுத்துவது தீ விபத்துகளுக்கு வழிவகுக்கும். பற்றரிகளை ஒரு தெளிவான பிளாஸ்டிக் பையில் போடவும் அல்லது தெளிவான பொதிசெய்யும் டேப், டக்ட் டேப் (duct tape) அல்லது மின் டேப்பைக் கொண்டு முனையங்களை மூடவும். பற்றரிகளைக் குளிர்ந்த, உலர்ந்த இடத்தில் சேமித்துப், பாதுகாப்பாக இயலுமானளவு விரைவில் அப்புறப்படுத்தி விடவும். சேதமடைந்த பற்றரிகள் உடனடியாகப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்படுவதற்காக உடனடியாகக் கொண்டு செல்லப்படவேண்டும்.